# கொடபொல பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 16 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, கொடபொல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண வேலை ஒன்று தொடர்பாக பெற வேண்டிய ரூபா 202,038 இற்கான தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 17 நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 1,252,347 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 13 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய மூலதன செலவுகள் ரூபா 1,032,694 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 5 நீர் செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,749,080 இற்கான தொகை மற்றும் சபைக்குச் சொந்தமான 25 கடைகள் நிர்மாணப் பெறுமதி ஆகிய 2,931,436 இற்கான தொகையை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) ரூபா 99,000 தொகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கை டிரக்டர் இனை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) கொடபொல காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த முத்திரை கட்டண வருமானம் ரூபா 1,173,130 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) இறுதி இருப்பு தொகைகளின் கூட்டு பெறுமதி ரூபா 107,446 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 4,289,585 இற்கான தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற ரூபா 17,148,154 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே காணப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 3,732,292 தொகையாகக் காணப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்கு**

நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 255,674 தொகையான தொங்கல் கணக்கின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 68,509,348 தொகைக்காக நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 28,345,374 தொகையான மீதியும் அடங்கியிருந்தது.

(ii) 10 வருட காலத்தை மிகைத்திருந்த பெற வேண்டிய களியாட்ட வரி மீதி ரூபா 419,131 தொகை காணப்பட்டது.

(iii) கடந்த ஆண்டு இறுதியில் உள்ளவாறு மூலதனக் கடன் பட்டோர் மீதியில் காணப்பட்ட 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 19,167,306 இற்கான மீதியை இனங்கண்டு தீர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்காமல் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 68,012,008 தொகைக்கான மூலதனக் கடன் கொடுத்தோர் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 28,995,075 இற்கான மீதியும் அடங்கியிருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 11,767,835 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

### 1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) பிரதேச சபைச் சட்டம் பிரிவு 140(1) | வீதவரி செலுத்தும் 761 பேரினால் 2005 முதல் 2017 வரை மேற்கொள்ளப்பட்ட புதிய நிர்மாண வேலைகள் தொடர்பாக ஆதனங் களை பெறுமதி மதிப்பீடு செய்து புதிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் வீதவரி அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்திருந்த நபர்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்து அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்று கணக்குகளுடன் சமர்த்திருக்கவில்லை. |
| (iii) விதி 199 | பொதுக் களஞ்சியம் மற்றும் நீர்க் களஞ்சிய இருப்புப் பதிவேடுகள் பெறுகைகளும் தொடர்புடைய அனைத்து பதிவுகளுக்கு எதிரே பண் டங்கள் கொள்வனவு தொடர்பாக உறுதிச் சிட்டின் இலக்கம் மற்றும் திகதியும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| (iv) விதி 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான வருடாந்த கணிப்பீடு நடாத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 571 | 2 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 5,124,146 தொகைக்கான திருப்பி செலுத்த வேண்டி வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

---------------------

**2.1 நிதி விளைவுகள்**

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,701,806 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,796,793 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,477,000 | 1,373,838 | 1,362,574 | 790,655 | 1,383,000 | 1,539,233 | 1,608,584 | 779,391 |
| வாடகை | 6,998,000 | 5,007,233 | 5,306,819 | 156,810 | 9,096,500 | 5,531,840 | 5,309,029 | 456,396 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 928,000 | 1,666,499 | 1,582,209 | 84,290 | 803,000 | 800,687 | 800,687 | - |
| ஏனைய வரு மானங்கள் | 19,014,200 | 20,743,816 | 14,314,710 | 26,930,617 | 15,669,000 | 22,267,431 | 13,701,487 | 20,501,511 |
| மொத்தம் | 28,417,200 | 28,791,386 | 22,566,312 | 27,962,372 | 26,951,500 | 30,139,191 | 21,419,787 | 21,737,298 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

---

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 28,417,200 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 28,791,386 ஆக காணப்பட்டது. ரூபா 21,737,298 தொகையான ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 50,528,684 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 22,566,312 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 27,962,372 ஆக காணப்பட்டது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

---

**(அ) வீதவரி**

---

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 149,251 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 157,054 தொகையின் ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 306,305 தொகை அகற்றப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 144,396 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 161,909 தொகை வரை நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

---

ஆரம்ப நிலுவை ரூபா 211,208 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 49,069 தொகையுடன் ரூபா 260,077 தொகை அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 50,462 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 209,615 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

---

**(அ) கடை வாடகை**

---

ஆரம்ப நிலுவை ரூபா 102,925 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,457,000 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 1,559,925 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 1,519,350 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 40,575 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**(அ) சந்தை மீன் பலகை வாடகை**

---

ஆரம்ப நிலுவை ரூபா 330,080 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 2,619,596 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 2,949,676 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 2,841,241 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 108,435 தொகை அளவு கூடிய பெறுமதி ஒன்றின் கொண்டிருந்தது.

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

**(அ) நீர்க் கட்டணம்**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,792,723 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 3,396,730 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,189,453 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 3,141,544 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 2,047,909 தொகை நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

**(ஆ) அறிவித்தல் பலகைக் கட்டணம்**

2016 ஆண்டு முதல் காணப்படும் அறிவித்தல் பலகை கட்டணம் ரூபா 185,200 இனை அறவீடு செய்திருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,726,642 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 22,157,826 தொகை காணப்பட்டது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை**

மாகாண எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெனியாய புதிய சந்தை நிர்மாணிப்பதற்காக தரையை மண் போட்டு தயாரிப்பதற்காக ரூபா 30,130,327 தொகை 2017 திசெம்பர் 31 திகதி வரை செலவிடப்பட்டிருந்தது. ரூபா 28,296,801 இற்கான பெறுமதிக்காக மதிப்பிடப்பட்டிருந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 03 வருட காலத்தில் இயலாமல் போனதாக செலவிடப்பட்ட தொகை பலனற்றதாக இருந்தது. அதேபோல் சந்தை நடத்துவதற்காக பெற்றிருந்த வேறு ஒரு காணிக்காக 3 வருடங்களுக்காக ரூபா 360,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது சபையின் திண்மக் கழிவுப்பொருள் 1,825,000 கிலோ கிராம் சேகரித்திருந்ததுடன், அவற்றில் 338,162 கிலோ கிராம் உர உற்பத்தியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதி கழிவுப் பொருட்கள் முறையற்ற விதமாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) சபையினால் குப்பை முகாமைத்துவத்திற்காக ஆண்டின் போது ரூபா 3,632,870 தொகை செலவிடப்பட்டு, 9488 கிலோ கிராம் உற்பத்தி செய்திருந்துடன், உர விற்பனையின் மூலம் ரூபா 105,996 தொகை உழைக்கப்பட்டிருந்தது.

**(இ) சுற்றாடல்சார் சிக்கல்கள்**

2008 ஜனவரி 25 திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமாணி அறிக்கையின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 104 நிறுவனங்களில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால் சபை ரூபா 416,000 வருமானமொன்றினை இழந்திருந்துடன், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால் சுற்றாடலுக்கு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

(i) பதவியணி திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் தர மற்றும் ஆரம்ப பதவிகளில் காணப்பட்ட 03 வெற்றிடங்கள் மற்றும் 21 மிகைகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அங்கீகரிக்கப்பட்ட வரையரைக்கு மிகையான சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,777,172 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படாமை

கணக்குகளில் அடங்கியிருந்த ரூபா 13,681,188 தொகை பெறுமதியான 05 காணிகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 06 காணிகள் உட்பட 11 காணிகளின் உரிமையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

### 3.3.2 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

ரூபா 8,300,000 பெறுமதியான 02 கட்டிடங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 02 சனசமூக நிலையங்கள், காணித் துண்டுகள் முதல் பயன்தரு வேலைகள் ஒன்றிற்கு பயன்படுத்தியிருக்கவில்லை.

### 3.3.3 வருடாந்த பண்டக் கணிப்பீடு

பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 217 மற்றும் 218 இன் பிரகாரம் வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய காணி மற்றும் கட்டிட கணிப்பீடு 2015 ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

காணிப் பதிவாளர் அலுவலத்திலிருந்து 2012 ஆண்டில் சபைக்கு கிடைக்க வேண்டி இருந்த ரூபா 28,880,175 தொகைக்கான முத்திரை கட்டண வருமானம் பெற்றுக் கொள்வதற்காக 09 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு என ரூபா 846,405 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

ருஹுன சுற்றுகை பணியகத்தின் ஏற்பாடுகளின் கீழ் சத்மஹல் எல்ல நுழை பாதையொன்று நிர்மாணிப்பதற்காக பெறுகை நடவடிக்கை முறை கடைபிடிக்காமல் ரூபா 1,889,671 இற்கு மற்றும் ரூபா 1,890,394 இற்கான 02 நிர்மாண வேலைகள் ஒரே ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 02 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,761,142 இற்கான தொகைக்கான கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிர்மாண வேலையின் இடை சொருகல் துண்டு கற்களை பதிசோதனை செய்த போது அந்த கற்களில் 70 சவீதம் உரிய நியமத்திற்கு இணங்கி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 13,888,451 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 11 சதவீதம் முதல் 76 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 04 செலவு விடயங்களில் ரூபா 9,107,922 இற்கான பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதி 07 சதவீதம் முதல் 41 சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 03 வருமான விடயங்களின் அனுகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 3,725,675 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 18 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு